**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**

**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No: 62/2021** **நாள் 17.07.2026**

**வாசா.1, திரு.குமரேசன்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார் –**

நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் தொகையானதை யார் முன்னிலையில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு எந்த தேதியில் கொடுத்தேன் என்று சொல்லியுள்ளேன். இது குறித்து நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லியுள்ளேன். எதிர்வாதியானவர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வெங்கடேஷ்வர ராஜா மற்றும் லதா ஆகியோருக்கும் இவ்வழக்கு எதிர்வாதிக்கும் இடையில் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டதாகவும் அந்த கிரைய ஒப்பந்த ஆவணத்தில் எதிர்வாதியின் கையொப்பம் உள்ளதை நான் பார்த்துக்கொண்டு எதிர்வாதியின் கையொப்பத்தை நானே போட்டுக்கொண்டு தாவா புரோ நோட்டை உற்பத்தி செய்து கொண்டுள்ளேன் என்று சொன்னால் அது தவறு. எதிர்வாதியானவர் எதிர்வழக்குரையில் இவ்வாறாக நான் பிராமசரி நோட்டை போர்ஜெரியாக உற்பத்தி செய்துள்ளதாக சொல்லிய பின்பு அதனை ஆட்சேபித்து என் தரப்பில் பதில் வழக்குரை எதையும் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் எதிர்வாதியானவர் எதிர்வழக்குரையில் சொல்ல சங்கதியான தாவா புரோ நோட்டை நான் மோசடியாக உற்பத்தி செய்துள்ளதாக சொன்ன பின்பும் அதனை குறிப்பிட்டு மறுத்து நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் நான் தாவா புரோ நோட்டானதை போர்ஜெரியாக உற்பத்தி செய்த காரணத்தினால்தான் எதிர்வழக்குரையில் எதிர்வாதியானவர குறிப்பிட்டு சொன்னதை நான் மறுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல மறுத்துள்ளேன். எனக்கும் வெங்கடேஷ்வர ராஜா மற்றும் லதா என்பவருக்கும் இடையில் விருதுநகர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2 நீதிமன்றத்தில் ஒரு வழக்கு நடந்தது என்றால் அப்படி எதுவும் வழக்கு இல்லை. எதிர்வாதியானவர் என் வீட்டில் இருந்து 4 வீடுகள் தள்ளி உள்ளார். எதிர்வாதியின் மனைவி பெயர் வாசுகி. அவர்களுக்கு ஒரு மகன், ஒரு மகள். எனக்கும் மம்சாபுரத்தை சேர்ந்த சுப்புலட்சுமி என்பவருக்கும் இடையில் ஒரு புரோ நோட்டு வழக்கு நடந்தது என்றால் ஆமாம். மேற்படிவழக்கில் எனக்கு எதிராக தீர்ப்புரையும் தீர்ப்பாணையும் ஏற்பட்டு தொகையை வசூல் செய்து கொள்ள மேற்படி சுப்புலட்சுமி என்பவர் என்னுடைய மாத சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யவேண்டும் என்று சொல்லி நிறைவேறுதல் மனுவை தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். என்னுடைய மாத சம்பளத்தில் இருந்து 5 ஆண்டுக்கு பிடித்தம் செய்யப்பட்டு அந்த வழக்கு முடிவுற்றது. நான் அரசு பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியில் உள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் எதிர்வாதியானவருக்கு நான் வழக்கு சம்மந்தமாக அறிவிப்பு எதுவும் அனுப்பிக்கொள்ள வேண்டாம் என்று அவர் சொன்னதால் நான் அனுப்பவில்லை என்று சொல்லியுள்ளேன் இது குறித்து நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் வழக்குரையில் சொல்லியுள்ளேன். எதிர்வாதியானவர் ஊரில் நல்ல பணம்பலமிக்கவர் என்றால் ஆமாம். எதிர்வாதியானவர் பணபலமிக்கவர் என்பதால் என்னிடமிருந்து அவர்

கடன்வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் என்னிடமிருந்து கடன் வாங்கினார். இராஜபாளையம் முத்தூட் பின்காப் என்ற நிதி நிறுவனத்தில் நான் போலி நகைகளை அடமானம் வைத்ததாக சொல்லி இராஜபாளையம் தெற்கு காவல் நிலையத்தில் குற்ற எண்.622/2025 ஆக என் மீதும் மற்றும் 4 நபர்கள் மீது முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதனால் தான் என்னை தலைமை ஆசிரியர் பணியில் இருந்து பணிஇடைநீக்கம் செய்தார்கள் என்றால் சரிதான். எதிர்வாதியிடமிருந்து அதிகம் பணம் பறிக்க வேண்டி நான் புரோ நோட்டை உற்பத்தி செய்து கொண்டு தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது சரியல்ல . தாவா புரோ நோட்டுக்கும் எதிர்வாதிக்கும் சம்மந்தம்இல்லை என்று சொன்னால் அப்படியில்லை நான் வழக்கிற்காக வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை .**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 17th day of July 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.